நாள்.12.02.2026
அசல் வழக்கு எண். 121/2023
வா. சா.2
பெயர். ஞானசுந்தரம்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
குறுக்கு விசாரணை

என்னுடைய தாத்தா பெயர் என்னவென்றால் சவரிமுத்து பணிக்கர். சவரிமுத்து பணிக்கருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 11 பேர்கள். அதில் ஒருவர் எனது தந்தை யாக்கோப்பு பணிக்கர் என்றால் சரிதான். சவரிமுத்து பணிக்கரின் சொத்துக்கள் அவரின் 11 பேருக்கும் பாகம் வைத்தார்கள் என்றால் சரிதான். பாகம் வைப்பது எனக்கு எப்படி தெரியும் என்றால் என்னுடைய தாத்தா சொன்னார். பாகப்பிரிவினை பத்திரமாக பதிவு செய்யப்பட்டதா என்றால் பத்திரம் எழுதியது தெரியும். அந்த பத்திரத்தை படித்து பார்த்தது இல்லை என்றால் சரிதான்.

படித்து பார்க்காததால் யார் யாருக்கு என்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, என் தந்தையுடன் பிறந்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் தெரியும். என் தந்தைக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 4 குழந்தைகள், அவர்கள் ஞானசுந்தரம், எஸ்தர், ஜெபகனி என்ற வசந்தா, சவரிமுத்து செல்லத்துரை ஆவார்கள். என் தந்தை எப்பொழுது இறந்தார் என்றால் 20 வருடத்திற்கு முன்பு இறந்தார். என் தந்தையின் சொத்துக்களை என்னுடன் பிறந்தவர்களுடன் பாகம் வைத்துக் கொண்டேனா என்றால் எனது சொத்துக்களை வாதியான எனது சகோதரருக்கு விடுதலை கொடுத்து விட்டேன். நான் மட்டும் விட்டு கொடுத்தேனா மற்ற இரண்டு சகோதரிகளுக்கும் விட்டு கொடுத்தார்களா என்றால் மூவரும் விட்டு கொடுத்துவிட்டோம்.

எப்பொழுது கொடுத்தோம் என்றால் 15 வருடத்திற்கு முன்பு கொடுத்தோம். வழக்கு சொத்துக்களின் ஆவணங்கள் என் தந்தை பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். எனது சகோதரரான வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது தம்பி தண்ணீர் செல்லுவதற்காக விட்ட இடத்தை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதியின் வீடு கிழமேல் தெருவில் வடக்கு பார்த்த வீடு என்றால் சரிதான். எனது தம்பி வீட்டின் மேல்விழும் மழை நீர் வடபக்க தெருவில் விழும் வகையில் சாய்ப்பு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எனது தாத்தா சவரிமுத்து பணிக்கர் தபசில் சொத்தை காலிமனையாக வாங்கினாரா வீடாக வாங்கினாரா என்றால் காலிமனையாக வாங்கினார்.

அதில் வீடு யார் கட்டினார்கள் என்றால் எனது தாத்தா தான் கட்டினார். எனது தாத்தா வீடு கட்டி 40,50 ஆண்டுகள் இருக்குமா என்றால் இருக்கும். என்னுடைய தாத்தா வழக்கு சொத்தை வீடாக தான் கிரையம் பெற்றார் என்றாலும் காலிமனையாக கிரையம் பெறவில்லை என்றாலும் சரியல்ல. வாதி வீட்டின் மேல்பக்கம் தகரமும், திண்டு போன்ற அமைப்பு எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

வாதி வீட்டின் மேல்பக்க சுவரில் ஒரு ஜன்னல் உள்ளது என்றால் சரிதான். ஜன்னலின் கதவு உட்பக்கமாக திறக்கும்படி உள்ளது என்றால் சரியல்ல, கதவுகள் கிடையாது. மேற்படி ஜன்னலில் கதவு உள்ளது என்றாலும் அது உட்பக்கமாக திறக்கும்படி உள்ளது என்றாலும் சரியல்ல. வாதியின் வீட்டின் கிழமேல் வடதலை அளவு எவ்வளவு இருக்கும் என்றால் 15 தச்சுமுழம் இருக்கும். அதில் வாதி எவ்வளவு இடத்தில் வீடு கட்டியுள்ளார் என்றால் முழுவதும் கட்டியுள்ளார்.

நான் எனது தம்பியான வாதிக்கு வாய்மொழியாக தபசில் சொத்தை விட்டு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு நான், என் சகோதரிகளும் அவசிய தரப்பினர்கள் என்றால் சரியல்ல. வாதி எத்தனை வருடங்கள் மும்பையில் இருந்தார் என்றால் 20 வருடத்திற்கு முன்பு வரை மும்பையில் இருந்தார். 20 ஆண்டுகாலமாக மும்பையில் இருந்து வந்து இங்கு தான் இருக்கிறார் என்றால் சரிதான். அதற்கு பிறகு மும்பை செல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் தபசில் சொத்திற்கு மேல்புறமும் எந்த காலி இடமும் கிடையாது என்றாலும் இருப்பதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும்சரியல்ல. வாதி எனது தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.